தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண் 263/ந/2023
நாள் 31.10.2023

திரு. S. கௌரி பிரசாந்த்,
நரசிங்கபுரம்,
சேலம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
நரசிங்கபுரம் நகராட்சி,
சேலம் மாவட்டம். – எதிர் மனுதாரர்

சேலம் மாவட்டம், ஆத்தூர், தாண்டவராயபுரம், நரசிங்கபுரம், தெற்கு காடு, பெரியபண்ணை தோட்டம் என்ற முகவரியில் வசிக்கும் திரு. S. கௌரி பிரசாந்த் என்பவரின் **07.09.2023** நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் **08.09.2023** அன்று பெறப்பட்டு **263/ந/2023** என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சேலம் மாவட்டம், ஆத்தூர், தாண்டவராயபுரம், நரசிங்கபுரம், தெற்கு காடு, பெரியபண்ணை தோட்டம் என்ற முகவரியில் வசிக்கும் திரு. S. கௌரி பிரசாந்த் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"சேலம் மாவட்டம், ஆத்தூர், தாண்டவராயபுரம், நரசிங்கபுரம், தெற்கு காடு, பெரியபண்ணை தோட்டம் என்ற முகவரியில் உள்ள எங்களது புல எண்.379/1, 379/3A என்ற இடத்தில் எங்களது அனுமதியின்றி குடிநீர் ராட்சத பைப்லைன் நரசிங்கபுரம் நகராட்சியின் அறிவுறுத்தலின் பேரில் அமைக்கப்பட்டுள்ளது மற்றும் விதிமீறி தார்சாலையும் போடப்பட்டுள்ளது. இது தொடர்பாக நரசிங்கபுரம் நகராட்சி ஆணையாளரை அணுகி

கேட்கும்போது உங்கள் இடத்தில் (சர்வே எண்.379/1, 379/3A) பைப்லைன் பதிக்க எவ்வித அனுமதியும் வழங்கவில்லை எனவும் மற்றும் தார்சாலை எங்களது இடத்தில் அமைக்கப்படவில்லை எனவும், அவ்வாறு அமைக்கவும் எவ்வித திட்டமும் இல்லை எனவும் குறிப்பாக எங்கள் இடம் எங்கு அமைந்திருக்கிறது என்று தெரியாது என தெரிவித்தார்.

நரசிங்கபுரம் நகராட்சியில் மனு அளிக்க வரும் மனுதாரரை நீண்ட நேரம் காக்க வைப்பது, மனு பற்றிய தகவல்களை எதிர்தரப்பினரிடமே தெரிவிப்பது, பொய்யான தகவல்களை / அறிவுறுத்தல்களை தந்து குழப்பம் அடையச் செய்து பிரச்சனையின் தன்மையை திசை திருப்புவது, தகாத வார்த்தை பயன்படுத்துவது, தங்களின் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி வேண்டுமென்றே மனுவினை கிடப்பில் போடுவதுமாக நகராட்சியினர் செயல்படுகிறார்கள்.

JCB இயந்திரம் கொண்டு எங்கள் நிலத்தை சேதப்படுத்துபவர்கள், நீங்கள் எங்கு வேண்டுமென்றாலும் செல்லுங்கள், பார்த்துக்கொள்கிறோம் என்று மிரட்டல் விடுத்தனர். நரசிங்கபுரம் நகராட்சி, அனைத்து ஆவணங்களும் வைத்திருப்பதாக தெரிவித்தனர். இவ்வாறு எங்கள் இடத்தில் அமைத்துள்ள பைப்லைனையும், சாலையையும் அகற்றிட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 14.09.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் நரசிங்கபுரம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

நரசிங்கபுரம் நகராட்சி ஆணையாளர் தனது 03.10.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

"சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14, சர்வே எண்.379/1, 379/3A-ல் வண்டிப்பாதை விளக்கி என்ற வகைப்பாட்டில் அமைந்துள்ள கஞ்சனூத்து சாலையினை தார் சாலையாக அமைப்பதற்காக 2017-18 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.36.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கப்பட்டுள்ளது. இப்பணி 2019 ஆம் ஆண்டு பணி முடிக்கப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும் இச்சாலை சீலியம்பட்டி புதூர், இராசிபுரம் சாலை ஆகிய பகுதிகளுக்கும், பாரதிபுரத்தில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக்கு செல்வதற்கும் மற்றும் பொதுமக்கள் அன்றாட தேவைக்காக பயன்படுத்தும் பிரதான சாலையாக இருந்து வருகிறது.

புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள திரு.ஈ.நஞ்சுண்டன், மேலாளர் 19.01.2022 முதல் 15.06.2023 வரை நரசிங்கம்புரம் நகராட்சியில் பணிபுரிந்து வந்துள்ளார்.

மனுதாரரின் மனுவில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.379/1, 3A-ஐ தொடர்ந்து வட்டாட்சியர், ஆத்தூர் அவர்களின் கடிதம் ந.க.சி.2283/2021 (சி1), நாள் 22.09.2021-ன்படி மனுதாரரின் இடம் வண்டிப்பாதை விளக்கியாக பதிவு செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைவாசல் கூட்டுரோடு அரசு ஆட்டுப்பண்ணையில் புதியதாக அமையவுள்ள கால்நடை மற்றும் விலங்கின அறிவியல் ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் (TWAD) மேட்டூர் அணையிலிருந்து குடிநீர் கொண்டு செல்லும் பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேற்படி குழாய்கள் அமைக்கும் பணி ஏதும் நரசிங்கபுரம் நகராட்சியால் மேற்கொள்ளப்படவில்லை என்ற விபரமும், அப்பணியானது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் அமைக்கப்பட்டது என்ற விபரமும் கனிவுடன் தெரிவிக்கப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

**(3) மனுதாரரும் மற்றும் நரசிங்கபுரம் நகராட்சி ஆணையரும் 20.09.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 14.09.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**(4) மனுதாரர் திரு. S. கௌரி பிரசாந்த் 20.09.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"சேலம் மாவட்டம், நரசிங்கபுரம் நகராட்சியில் எங்களுக்கு சொந்தமான இடத்தில் ( புல எண்.379/3A) எங்களது அனுமதியின்றி பாதிப்பை கருத்தில் கொள்ளாமல் நகராட்சியினர் ராட்சத பைப்லைன் போட்டு எங்களது நிலத்தை சேதப்படுத்தியுள்ளனர். மேலும் 379/1 & 379/3A-ல் அமைந்துள்ள சாலையையும் எங்களது அனுமதியின்றி அமைத்துள்ளனர். ராட்சத பைப்லைன் மற்றும் அனுமதியின்றி சாலை அமைத்தது குறித்து நரசிங்கபுரம் நகராட்சியை தொடர்புகொண்டு விவரம் கோரியபோது மேற்கண்ட ராட்சத பைப்லைன் அமைக்கும் திட்டம் ஏதும் நகராட்சியால் போடப்படவில்லை எனவும், மேற்கண்ட இடத்தில் சாலை அமைக்கும் திட்டம் ஏதுமில்லை என தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் தெரிவித்துள்ளனர்.

எனவே, எங்களது இடத்தில் அமைக்கப்பட்டுள்ள ராட்சத பைப்லைனை அகற்றவும், எங்களது இடத்தில் போடப்பட்டுள்ள சாலையை அகற்றம் செய்யவும் தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ள மனுதாரர் தனது 20.09.2023 நாளிட்ட எழுத்து பூர்வமான வாக்குமூலத்தையும் சமர்ப்பித்துள்ளார். அவ்வாக்குமூலத்தில் எங்கள் அனுமதியின்றி பட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, நிலஉரிமையாளரிடம் எவ்வித அறிவிப்பும் இல்லாமல் / அனுமதியில்லாமல் நில அளவீடு செய்யக்கூடாது என்றும் மற்றும் வருவாய்த் துறை ஆவணங்களில் எவ்வித திருத்தமும் மேற்கொள்ளக்கூடாது என்றும் வருவாய்த்துறைக்கு பரிந்துரைக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

**(5) எதிர்மனுதாரரான நரசிங்கபுரம் நகராட்சி ஆணையர் உடல் நலக் குறைவின் காரணமாக 20.09.2023 அன்று நடைபெற்ற விசாரணைக்கு வரஇயலாத காரணத்தினால் அவர் சார்பாக 21.09.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் நரசிங்கபுரம் நகராட்சியில் இளநிலை உதவியாளராகவும், மேலாளராகவும் (பொறுப்பு) பணியாற்றும் திரு. வீ. தினேஷ்குமார் என்பவர் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"சேலம் மாவட்டம், நரசிங்கபுரத்தைச் சேர்ந்த திரு. எஸ். கௌரி பிரசாந்த் என்பவர், தங்களுக்கு சொந்தமான இடத்தில் தங்களது அனுமதியின்றி நரசிங்கபுரம் நகராட்சியினர் பைப்லைன் பதித்தும், சாலைப் பணியை மேற்கொண்டுள்ளதும் சம்பந்தமாக புகார் மனு மற்றும்

அது குறித்த கோப்பு நரசிங்கபுரம் நகராட்சியில் காணவில்லை என்பதையும். மேலும் நான் மேற்கண்ட நகராட்சியில் 3 மாதங்களுக்கு முன்புதான் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தேன். எனவே, இந்நேர்வு தொடர்பாக எத்தகைய தகவலும் எனக்கு தெரியாது என்பதையும், மேற்கண்ட புகார் மனு தொடர்பாக நகராட்சி ஆணையரின் அறிக்கை ஏதும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நரசிங்கபுரம் நகராட்சியில், பொறியாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர் பணியாற்றி வருகின்றனர் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) இந்நிலையில் மனுதாரரின் 07.09.2023 நாளிட்ட முறையீட்டு மனு தொடர்பாக விசாரணை செய்யும் பொருட்டு சம்மந்தப்பட்ட சேலம் மாவட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், நகராட்சி ஆணையாளர், உதவிபொறியாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர் 03.10.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகக் கோரும் 26.09.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(7) சேலம் மண்டலம், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், நகராட்சி ஆணையாளர், உதவிபொறியாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர் 03.10.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.

''சேலம் மண்டலம், நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட மனுதாரரின் இடத்தின் வழியாக தலைவாசல் கூட்டுரோடு அரசு ஆட்டுப் பண்ணையில் புதிதாக அமைக்கப்பட்ட கால்நடை மற்றும் விலங்கின அறிவியல் ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையத்திற்கு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம், மேட்டூர் அணையிலிருந்து குடிநீர் கொண்டு செல்லும் பணி மேற்கொள்ளப்பட்டது என்றும், நரசிங்கபுரம் நகராட்சியால் மேற்கண்ட குடிநீர் குழாய் பதிக்கும் பணி நடைபெறவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட சர்வே எண் 379/1 மற்றும் 379/3A வண்டிப்பாதை வகைப்பாட்டில் ஏற்கனவே இருந்த மண்சாலைக்கு பதிலாக தார் சாலை அமைப்பதற்கு ரூபாய் 36 இலட்சம் மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது என்பதையும் இம்மறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளனர்.

(8) இருப்பினும், மனுதாரர் புகாராக தெரிவிக்கும் இடத்தின் வகைப்பாடு குறித்து விளக்கம் தேவைப்படுவதால் நரசிங்கபுரம் கிராம நிர்வாக அலுவலரை உரிய ஆவணங்களுடன் 12.10.2023 அன்று விசாரணைக்கு ஆஜராக பணித்திடுமாறு இம்முறைமன்ற நடுவ அலுவலக 05.10.2023 நாளிட்ட கடித்தின் மூலம் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

(9) நரசிங்கபுரம் கிராம நிர்வாக அலுவலர் திரு.நாகராஜ் என்பவருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அவருக்கு பதிலாக இராமநாயக்கன்பாளையம் தெற்கு கிராம நிர்வாக அலுவலர் திரு.மணிவேல் என்பவர் ஆத்தூர் வட்டாட்சியரின் அங்கீகார கடிதத்துடன் இம்முறைமன்ற நடுவத்தில் 12.10.2023 அன்று ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்.

"சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், நரசிங்கபுரம் கிராமம், திரு.கௌரிபிரசாத் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில், புல எண்கள்.379/1 மற்றும் 379/3A ஆகியன தொடர்பான புகார் மனு மீதான விசாரணையில் சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், நரசிங்கபுரம் கிராமம், புல எண்கள் 379/1 மற்றும் 379/3A ஆகியவற்றின் அசல் 'அ' பதிவேடு, அடங்கல் பதிவேடு, சிட்டா பதிவேடு ஆகியவை மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களிடம் இன்று 12.10.2023–ல் நேரடியாக பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

மேலும் மேற்கண்ட பதிவேடுகளின் சான்றளிக்கப்பட்ட உண்மை நகல்கள் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கப்பட்டது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**(10)** முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், நரசிங்கபுரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை, சேலம் மாவட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், நரசிங்கபுரம் நகராட்சி ஆணையர், நகராட்சி பொறியாளர், நகரளவு ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் சமர்ப்பித்த ஆவணங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions namely:-

7 (c) where the irregularity is due to willful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

சேலம் மாவட்டம், நரசிங்கபுரத்தைச் சார்ந்த மனுதாரர் திரு.S.கௌரி பிரசாந்த் என்பவர் தனது 07.09.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட தங்களது சொந்த இடமான புல எண்.379/1 மற்றும் 379/3A–ல் நகராட்சியினர் குடிநீர் ராட்சத பைப்லைன் மற்றும் தார்சாலை அமைத்து மேற்படி இடத்தினை சேதப்படுத்தியுள்ளனர் என புகார் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் புல எண்.379/1 மற்றும் 379/1A இடத்தில் கால்நடை மற்றும் விலங்கின அறிவியல் ஒருங்கிணைந்த உயர் ஆராய்ச்சி நிலையத்திற்கு குடிநீர் வழங்கும் வகையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ராட்சத குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது எனவும் நரசிங்கபுரம் நகராட்சியால் மேற்கொள்ளப்படவில்லை எனவும் மற்றும் மேற்படி புல எண்களில் அமைந்துள்ள இடமானது வண்டிப்பாதை விளக்கி என்ற

வகைப்பாட்டில் அமைந்துள்ளதால் 2019 ஆம் ஆண்டில் தார்சாலை அமைக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளதாக நகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

ஆனால், புல எண். 379/1 மற்றும் 379/3A–ல் அமைந்துள்ள நிலத்தின் வகைப்பாட்டினை குறித்து வருவாய் ஆவணங்களான 'அ' பதிவேடு (A Register), சிட்டா மற்றும் அடங்கல் ஆகிய பதிவேடுகள் பரிசீலனை செய்யப்பட்டதில் நிலத்தின் உரிமையாளரின் பெயர் சாந்தி என உள்ளது. மேற்காணும் மூல ஆவணங்களின் மூலம் சாந்தி என்பவர் (மனுதாரரின் தாயார்) சம்மந்தப்பட்ட இடத்தின் உரிமையாளர் என்பது எவ்வித சந்தேகமுமின்றி தெள்ளத்தெளிவாக தெரிய வருகிறது.

இந்நிலையில் மனுதாரர் சமர்ப்பித்த புகாரின் தன்மையை உணராமல், நரசிங்கபுரம் நகராட்சி ஆணையாளர் 21.09.2023 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராக பொறுப்பு வாய்ந்த நகராட்சி அலுவலரை பணிக்காமல், பணியில் சேர்ந்து 3 மாதங்களே ஆகியுள்ள, இப்புகார் தொடர்பாக எவ்வித தகவலும் தெரியாத இளநிலை உதவியாளரை அனுப்பி வைத்து இம்முறைமன்ற நடுவத்தின் நேரத்தை வீண்டித்து, தனது கடமையில் பொறுப்பின்றி செயல்பட்டுள்ள நரசிங்கபுரம் நகராட்சி ஆணையாளரின் செயல்பாட்டினை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது.

மனுதாரர் தனது இடத்தில் குடிநீர் குழாய் மற்றும் தார்சாலை அமைக்கப்படுவது குறித்து நகராட்சியில் புகார் தெரிவித்த உடனேயே உரிய வருவாய் ஆவணங்களை நகராட்சியினர் ஆய்வு செய்திருந்தால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் குழாய் அமைக்கப்படுவதை தவிர்த்திருக்கலாம். மேலும் நகராட்சியினர் எவ்வித மூல ஆவணங்களையும் பரிசீலனை செய்யாமல் தனிநபர் இடத்தில் விதிமீறி தார்சாலை அமைத்துள்ளதன் மூலம் நரசிங்கபுரம் நகராட்சி ஆணையர், பொறியாளர் மற்றும் நகரமைப்பு அலுவலர் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டு, உள்நோக்கத்துடனும், தங்களது பணியில் கடமை தவறியுள்ளது வெட்ட வெளிச்சமாக தெரிகிறது. இவ்வாறு உரிய விதிகளை பின்பற்றாமல் முறைகேடாக நடந்து கொண்ட சம்பந்தப்பட்ட நரசிங்கபுரம் நகராட்சி ஆணையாளர், பொறியாளர், நகரமைப்பு அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீது உரிய விதிகளின்கீழ் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும், மனுதாரரின் தாயார் பெயரிலுள்ள நகர்புல எண்.379/1 மற்றும் 379/3A–ல் உள்ள இடத்தினை திரும்பவும் அவர்களுக்கு ஒப்படைக்கும் வகையில் உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு, எடுத்த நடவடிக்கையின் அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு 45 நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு நரசிங்கபுரம் நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

Severe disciplinary action should be launched against the Municipal Commissioner, Municipal Engineer and other field officials concerned and involved in this unlawful, arbitrary and brutal act of trespassing on the patta lands for formation of road by the Municipality. The petitioners' mother had moved the authorities consistently and failed to receive fair and appropriate disposal of her legitimate prayer of not laying road or pipeline under the earthen surface of the land that belongs to her with sovereign right. This sort of barbarous action on a private property by a local body cannot be brooked and let gone scot free without accountability. This Forum expresses its outright shock and condemnation over this excess, illegal, unjust and violative of one's constitutional rights. Hence the DMA is directed to obtain the property owner's consent by usual procedure as laid down by payment of compensation as per rules and regulations or remove the road access. If the land owner moves the court the Municipality will have to face embarrassment of strictures, compensation as fixed and needless adverse remarks in the light of the facts of this case.

2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. S. கௌரி பிரசாந்த்,
பெரிய பண்ணை தோட்டம், தெற்கு காடு,
நரசிங்கபுரம், சேலம் மாவட்டம் – 636 108.

2) ஆணையாளர், நரசிங்கபுரம் நகராட்சி,
சேலம் மாவட்டம் – 636 108.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்,
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர்